# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## இலங்கை மருந்தாக்கவியல் சங்கம் (கூட்டிணைத்தல்)

### இலங்கை மருந்தாக்கவியல் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்

இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ டாக்டர் ஜனக சேனாரத்ன அவர்களால்
2026 யூன் மாதம் 25 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 யூன் மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

[67 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 72.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

## இலங்கை மருந்தாக்கவியல் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

“மருந்தாக்கவியல் சங்கம்” என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட அதன் குறிக்கோள்களை பயனுற நிறைவேற்றும் மற்றும் எல்லாக் கருமங்களைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப் படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் மற்றும் சொல்லப் பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக் கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை மருந்தாக்கவியல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

மருந்தாக்கவியல் சங்கத்தைக் கூட்டிணைத்தல்

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப் பின்னர் “சங்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மருந்தாக்கவியல் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள மற்றும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர் களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டிணைக்கப்பட்ட குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “மருந்தாக்கவியல் சங்கம்” என்னும் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாதல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம்

PL15819 - 97 (2026/06)

என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்), சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமைசெய்தலுக்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** (1) ஏதேனும் எழுதப்பட்ட சட்டம், கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) வாகடகம் பற்றிய அறிவியல் மற்றும் இலங்கையில் அதன் ஏற்புடைமையை மேம்படுத்துதலும் விருத்திசெய்தலும்;

(ஆ) வாகடகம்சார் அறிவை கொள்ளுதல், பரப்புதல் மற்றும் இடைநிலையில் பரிமாற்றுதல் என்பவற்றை மேம்படுத்துதல்;

(இ) எல்லா மட்டங்களிலும் வாகடகம் சார் கல்வியை மேம்படுத்துதல்.

(ஈ) வாகடகம் பற்றிய அடிப்படை ஆராய்ச்சிகளை மேம்படுத்துதலும் ஊக்கப்படுத்துதலும்.

(உ) அதன் உறுப்பினர்களின் தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் பொதுவான நடத்தை பற்றிய உயரிய தராதரங்கள் பேணுதலை வசதிப்படுத்துதல், அத்துடன்

(ஊ) இலங்கையில் வாகடகவியல் பற்றிய உயர் தொழில்சார் அந்தஸ்தினை அதிகரித்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் குறிக்கோள் களின் அமுலாக்கலில், கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அத்தகைய அமுலாக்கலானது இனம், மதம், சாதி, பால், அரசியற்கொள்கை, பிறப்பிடம் அல்லது அத்தகைய ஏதுக்கள் ஏதேனும் ஒன்றின் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் அல்லது பகிரங்க கூட்டுத் தாபனத்தின் அமைச்சினது அல்லது திணைக் களத்தினது பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டிணைக் கப்பட்ட குழு உறுதிப் படுத்துதல்

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும், அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக் கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுதப்பட்ட சட்டத்திற்கும் அமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களின் முகாமை செய்தலும் நிருவகித்தலும் 7ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குனர்களைக் கொண்டுள்ள பேரவையினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற் போந்த நாளன்று பதவிவகிக்கும் இலங்கை மருத்தாக்கவியல்

சங்கத்தின் பேரவையின் உறுப்பினர்கள், பந்தி (ஆ) இன் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைவாக, 7ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் முதலாவது பேரவை நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலப் பேரவையொன்றாக பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) ஏழாம் பிரிவின் உட்பிரிவுகள் (3), (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலப் பேரவை இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணின்றி கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்துக்கான விதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) இடைக்காலப் பேரவையின் ஏதேனும் முடிபானது சமுகமளித்திருக்கும் அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மையோரால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பேரவையானது இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்களும் மதியுரைநர்களும் உட்பட, பேரவையின் ஒவ்வொரு பதவி தாங்குநரும் மூன்று ஆண்டு காலப்பகுதி யொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைநர், சொல்லப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீளநியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடைய வராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநர் ஒருவரின் இறப்பு, பதவிவிலகுதல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், பேரவையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

கூட்டிணைக் கப்பட்ட குழுவின் தத்துவங்கள்

**6.** வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டம் மற்றும் 7ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு பின்வரும் கருமங்களை செயல்படுத்தவும் நிறைவேற்றவும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங் களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்கும், வாடகைக்கு எடுக்கவும், நிர்மாணிக்கவும், புனரமைக்கவும் மற்றும் வேறு வகையாகப் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு அவற்றைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் கூட்டி ணைக்கப்பட்ட குழுவினால் அதன் சார்பில் நேரடியாகவாயினும்சரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினூடாகவாயினும்சரி அல்லது முகவரினூடாகவாயினும்சரி செய்து கொள் வதற்கும் மற்றும் புரிவதற்கும் அல்லது நிறை வேற்றுவதற்கும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை அடைவதற்காக பிணைப்பொறுப்புக்களுடனோ அல்லது பிணைப்பொறுப்புக்களின்றியோ

நிதிகளை கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெற்றுக் கொள்ளுவதற்கும்:

ஆயின், பேரவையானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஈ) பந்தி (இ) வின் காப்புவாசகத்தின் ஏற்பாடுகளுக் கமைய, மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் வேறு கை மாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல், அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்துதல், பேணுதல் மற்றும் மூடுவதற்கும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப்பொறுப்பு அல்லது ஏதேனும் நிலையான அல்லது தனிப்பட்ட ஆதனம் என்பவற்றை பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிர்வகித்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர் களையும் ஏனைய ஊழியர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத் தலும், அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள், மற்றும் பணிக் கொடைகளை அவர்களுக்குச் செலுத்துதலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகளையும், கருத்தரங்குகளையும், மாநாடுகளையும் ஒழுங்கு படுத்துதலும்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும், ஒருங்கிணைதலும்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக் காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள், அலுவலர்கள், மற்றும் ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல்;

(ஓ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவையேனும் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான மற்றும் அவசியமானபோது பேரவையின் ஏதேனும் உபகுழுவை நியமித்தல்; அத்துடன்

(ஔ) பொதுவாக, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக் கோள்களை எய்துவதற்காக, அத்தகைய எல்லாச் செயல்களையும், காரியங்களையும் செய்தலும்.

கூட்டிணைக் கப்பட்ட குழுவின் விதிகள்

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக் கூட்டமான்றில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர் களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை யொன்றினால் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை, காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறை யானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியிலிருந்து நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும்;

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந் தெடுத்தல், அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும் மற்றும் சம்பளங்கள் மற்றும் படிகளின் கொடுப்பனவு;

(ஈ) பேரவையினதும் அல்லது வேறு ஏதெனும் குழுவினதும் கூட்டங்களைக் கூட்டுவதற்காகவும் அதனை நடத்துவதற்காகவும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும்,அதற்கானகூட்டநடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) பேரவையினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்கலும்;

(ஊ) கூட்டணைக்கப்பட்ட குழுவின் ஆதனங்களின் நிர்வாகமும் முகாமையும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்திசைந்தும் ஒத்துழைத்தும் ஒப்பந்தத்தில் ஈடுபட்டும் முறைமையை ஆளுகின்ற நடவடிக்கைமுறை; அத்துடன்

(ஏ) பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்று அதேபோன்ற கூட்டமொன்றிலும் மற்றும் அதே போன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) ஐந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) வின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், அத்தகைய விதிகள் ஆக்கப்படுதலின்மேல் மூன்று மாதங்களினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(4) வர்த்தமானியில் அதன் வெளிப்படின் இரண்டு மாதங்களினுள் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதெனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதற்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஏதேனும் தேதியன்றுள்ள அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

உறுப்பினர் பற்றிய

**8.** பேரவையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்; இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக் கப்பட்ட குழுவின் நிதியம்

**9.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

(2) பிரிவு 6 (இ) என்றும் பந்தியின் காப்புவாசகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டிணைக்கப்பட்ட குழுக்களாகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதி விருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்றவகையாகப் பெறப்பட்ட எல்லா பணங்களும், பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் பிரிவு 6 (இ) என்றும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதெனும் செலவீனத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**10.** (1)கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு ஏப்பிறல் 1ஆம் தேதியிலிருந்து தொடங்கி தொடரும் ஆண்டின் மாச்சு 31ஆம் தேதியில் முடிவடைதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் வருமானமும் செலவினமும், சொத்துகளும் பொறுப்புகளும் மற்றும்

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், தகைமை பெற்றவொரு கணக்காய்வாளரொருவரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்டு அத்தகைய தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரொருவரினால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக “தகைமைபெற்ற கணக்காய்வாளர் என்பது -

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவனத்தின் சபையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியான ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவனத்தின் சபையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக் கணக்காளர்கள் குழுமம் ஒன்று, எனப் பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**11.** (1) ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப் பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது 10ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட்ட

கணக்குகளின் கூற்று, சான்றுறுதிப்படுத்தப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எல்லா சொத்துகள் குழுவின் பொறுப்புகளின் நிரலொன்று, மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் பற்றிய விபரங்கள் மற்றும் 7ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுடன் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை மருந்தாக்கவியலுக்கு வருமதியான மற்றும் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்

**12.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் சங்கத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழு அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**13.** இச்சட்டத்தினதும் வேறு எழுத்தினாலான ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும்

ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கான தத்துவத்துடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் அல்லது எவ்வாறிருப்பினும் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டிணைக் கப்பட்ட குழுவின் இலச்சினை

**15.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, குழுவின் தலைவர் அல்லது பொதுச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரது முன்னிலையிலன்றி எத்தகையதுமான ஏதேனும் சாதனத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமூகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, பேரவையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான பேரவையின் பதவிதாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக் கின்ற ஆதனம்

**16.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது, ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள் களை ஒத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி

அதன்உறுப்பினர்களிடையேஏதேனும்வருமானத்தைஅல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பீரிவின் நோக்கங்களுக்காக, பொதுக் கூட்டமொன்றில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர் களின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால், வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளரின் அங்கீகாரத்துடன் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகளைப் பேணல்

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளைப் பேணல் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளை பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

பொருள் கோடல்

**18.** இச்சட்டம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி-

"வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட வங்கி யொன்று எனப் பொருள்படும்; அத்துடன்

"எழுத்திலான சட்டம்" என்பது, அரசியலமைப்பில் வெளிப்படுத் தப்படுகின்ற அத்தகைய அதே பொருளினை குறித்தளிக்கும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**19.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது